[31st August 1970

நெல் எடுத்துச் செல்லுதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உணவு வணிகவரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசிடம் நெல் இருப்பு உபரியாக இருப்பதன் காரணமாக தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல் எடுத்துச் செல்வதற்கான 50 சதவீத விதிமுறைக் கொள்முதலை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. பி.யு. ஷண்முகம் : (அ), (இ) : ஆம். குறுவை நெல் தாராளமாக விற்பனை செய்யப்படுவதற்கு வகை செய்வதற்கென 1970 செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல்/அரிசி எடுத்துச் செல்லப்படுவதன் மீதான எல்லாக் கட்டுப்பாடு களையும் நீக்குவதெனவும், 50 சதவீத விதிமுறை கொள்முதலை நிறுத்தி வைப்பது எனவும் அரசு முடிவெடுத்துள்ளது.

THIRU A. R. DAMODARAN : May I know whether procurement is to be totally stopped or whether it is to be restricted to the extent of 15 per cent which is being done in other districts ?

மாண்புமிகு திரு. பி.யு. ஷண்முகம் : இந்த 15 சதவீதக் கொள் முதல் முறைகூட தற்போது தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக் கிறது.

MR. CHAIRMAN : Question 59 is postponed.

Panchayats

*60. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the news item published recently in "Panchayat Seithi", a weekly magazine, that the Hon'ble the Minister for Local Administration has stated that he would appoint a high-level Committee to study the working of the Panchayats is correct; and

(*b*) if so, when the Committee will be formed ?

பஞ்சாயத்துக்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) பஞ்சாயத்து ஊராட்சிகளில் நிலவரத்தைக் கண்டறிய ஒரு உயர்தர ஆய்வுக் குழுவை நியமிக்கப் போவதாக தமிழ் நாடு அரசின் உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கூறியதாக அண்மையில் ''பஞ்சாயத்து செய்தி'' என்னும் வார இதழில் வெளியான செய்தி சரியா ?

(இ) ஆமெனில் அக்குழு எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) சரியான தகவல் அல்ல.

(இ) தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தற்போதைய பொருளாதார நிலைமையையும், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அவற்றிற்கான அதிகாரங்களையும் முழுமையாக மறு ஆய்வு செய்ய ஊராட்சி ஒன்றிய நிதி விசாரணைக் குழு என்ற ஒரு குழு அமைக்கப்பட்டது.

திரு. எஸ். முத்துசாமி ; ஊராட்சி ஒன்றியங்களில் 'சிக் (Sick) யூனியன்' என்று சொல்லப்படும் நோயாளி ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 2, 3 மாதங்களாகச் சம்பளம் கிடைக்காமல் அந்த ஆசிரியர்களை நோயாளிகளாக்கப்பட்ட நிலைமையை மாற்ற, உடனடியாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்படியான நிலைமையை அரசு அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அப்படிப்பட்ட நிலைமைகள் சிலபல ஊராட்சி ஒன்றியங்களில்தான் ஏற்படுகின்றன என்பதன் காரணமாக நிரந்தரமான பரிகாரம் இதற்குக் காண வேண்டும் என்ற அளவில் இதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கூட அந்தக் குழுவில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். (உறுப்பினர் இல்லை என்று சொல்லுகிறார்) அது தன் பணியை முடித்துக் கொண்டுவிட்டது. வெகு விரைவில் அதன் அறிக்கையை எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பணத் தட்டு இல்லாமல் அதற்குச் சரியான வகையில் முன்பணம் கொடுத்து உதவி செய்ய இருக்கிறோம். ஆசிரியர்களை நோயாளிகளாக்கக் கூடிய அளவுக்கு நாங்கள் விட்டுவிட மாட்டோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : பஞ்சாயத்துச் செய்தியில் வந்த இந்தச் செய்தி சரியல்லவாயினும் அதற்கு என்று ஒரு ஆய்வுக் குழு நியமிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தற்போதே மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இதுபற்றிய கருத்துக்களை நமக்குத் தெரிவித்து வருகின்றன. அது மட்டுமல்ல. ஊராட்சி மன்றத் தலைவர்களின்அமைப்பு இருக்கிறது. அவர்களும் அதுபற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட தனிக் குழு அமைக்கும் செயல் குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[Note—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. ANNOUNCEMENTS.

(1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Commitee held at 3-30 p.m. to-day, the following further programme of business has been decided :—